உ
சிவமயம்



கலைவாணி வீதி வடலியடைப்பைச் சேர்ந்த

# அமரர் முத்து கந்தையா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

17-03-2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்பிற்க்கும் பாசத்திற்க்கும்
பெருமதிப்பிற்குமுரிய குடும்ப தலைவர்

## அமரர் திரு. முத்து கந்தையா

அவர்களின்
திருப்பாதங்களுக்கு

# இம் மலர் சமர்ப்பணம்





மண்ணில் நீ உதித்து
மாணிக்கமாய் வாழ்ந்தாய்
எண்ணிலாப் பாசம் எம் மீது வைத்தாய்
இதய மலரால் உங்களைப் பூசித்து
இந்நூலை சமர்ப்பிக்கின்றோம்.



இங்ஙனம்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



வடலியடைப்பு கலைவாணி வீதியை
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த
அமரர்

## திரு. முத்து கந்தையா

அவர்கள்
இறைபதமடைந்தமை குறித்து
வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

17.03.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைப்பாக்கள்



### கணேசர் துதி

சுக்லாம் பரதரம் விஸ்ணும் ஸஹிவர்ணம் சதுர்புஜம்
ப்பிரன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோபவ சாந்தயே

### கணபதி காயத்திரி மந்திரம்

ஓம் தத்புருஷாய வித் மஹே
வக்கிர துண்டாய தீ மஹி
தந்தோ தந்திப்ர சோதயாத்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்குதம் உருவாக்கும்
ஆதலால் வானோடும் ஆனை முகத்தானை
காதாலால் கூப்புவர் தம்கை

## தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

உண்ணா முலையுமையாளொடு முடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மணணார்ந்தன வருவித்திரண் மழமை முழுவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் மறுமே

திருச்சிற்றம்பலம்

(திருஞானசம்மந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய் தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்து கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய் தான் தவித்துன்னை போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடை
யாய் என்னை கண்டுகொள்ளே
(மணிவாசகர்)

## திருவிசைப்பா

இடர்கெடுத்(து) என்னை ஆண்டு கொண்டு என்னுள்
இருட்பிழம்(பு) அற எறிந்து எழுந்த
சுடர் மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூய நற் சோதியுள் சோதி
அடல் விடைப்பாகா அம்பலக் கூத்தா
அயனோடு மாலறியாமை
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனே பணியுமா பணியே
(திருமாளிகைத் தேவர்)

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழ விடையாற்க்கு வழி வழி
யாளாய் மணஞ்செய் குடிப் பிறந்த
பழ அடியாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே
(சேந்தனார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ அருளும் போது உன் அடியில் கீழ் இருக்க என்றார்
(காரைக்கால் அம்மையார்)

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குரவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புனர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காம பெருமாளே

திருச்சிற்றம்பலம்

## திருமுறைத்தொகுப்பு

தொகுத்தவர் : நம்பியாண்டார் நம்பி
தொகுப்பித்தவர்: இராஜராஜசோழன்

1ம்
2ம் திருமுறை சம்மந்தர் தேவாரம்
3ம் திருமுறை
(மொத்த பதிகங்கள் 384 பாடல்கள் : 4159)

4ம் திருமுறை
5ம் திருமுறை திருநாவுக்கரசர் தேவாரம்
6ம் திருமுறை
மொத்த பதிகங்கள் 313 பாடல்கள் 3045

7ம் திருமுறை சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்
(பதிகம் 100 பாடல்கள் 1026)

8ம் திருமுறை மாணிக்கவாசகர் திருவாசகமும் திருக்கோவையாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 9ம் திருமுறை | திருவிசைப்பா | 1. திருமாளிகைத்தேவர்<br>2. கருவூர்த்தேவர்<br>3.பூந்து நம்பி கடாநம்பி<br>4. கண்டராதித்தர்<br>5. வேணாட்டடிகள்<br>6. திருவாலிய முதனார்<br>7. புருடோத்தம நம்பி<br>8. சேதிராயர் |
| | திருப்பல்லாண்டு<br>பாடல் 13 | சேந்தனார் |
| 10ம் திருமுறை | திருமந்திரம்<br>தந்திரம் 9 பாடல் 3000 | திருமூலர் |
| 11ம் திருமுறை | 40 பிரபந்தங்கள் | 1. காரைக்கால் அம்மையர்<br>2. ஐயடிகள் காடவர் கோன்<br>3. சேரமான் பெருமான்<br>4. நக்கீரர்<br>5. கல்லாட தேவர்<br>6.கபில தேவர்<br>7. பரண தேவர்<br>8. இளம் பெருமான் அடிகள்<br>9. அதிராவடிகள்<br>10. பட்டினத்தடிகள்<br>11. நம்பியாண்டார் நம்பி |
| 12ம் திருமுறை | பெரிய புராணம் | தெய்வச் சேக்கிழார் |

பாடல் 4256 காண்டம் 2 சருக்கம் 13

**தந்தை மகற்காற்றும் நன்றி அவயத்து**
**முந்தி இருப்பச் செயல்**
**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என் நோற்றான் கொல் எனும் சொல்**

-பொருளுக்கும் போகத்துக்கும் பதவிக்கும் மக்கள் குடம் குடமாக கண்ணீர் சிந்துகின்றனர். கடவுளுக்காகவென்று யார் கண்ணீர் சிந்துகின்றார். கடவுளை நாடி அருள் தாகமெடுத்து கசிந்து அழுகின்றவர்களுக்கு கடவுள் தம்மைக் காட்டியருள்கின்றார்

-ஸ்ரீ ராமகிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு முத்து கந்தையா அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள்.

இலங்கையின் வடக்கே அமைந்த யாழ்ப்பாண மாவட்டத்தின் வலி காமத்திலே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சீரும் சிறப்பும் பெற்று வானுயர்ந்த தோப்புக்களும் வாழ்க்கை மேம்படு வளங்களும் மலிவுற்று திகழும் வடலியடைப்பு என்னும் கிராமத்திலே வாழ்ந்து வந்த முத்தர் தங்கமுத்து என்னும் சீரிய தம்பதியினருக்கு அவர்கள் பெற்ற தவப் பயனின் பயனாக கிடைத்த முத்தாக அமரர் திரு முத்து கந்தையா அவர்கள் 1939ம் ஆண்டு தைமாதம் 10ம் திகதி இப் புண்ணிய பூமியில் அவதரித்தார். ஏக புத்திரனாக அவதரித்த அவருக்கு ஏக புத்திரியாக உடன் பிறப்பாக அவதரித்தவர் நாகம்மா என்னும் நங்கை நல்லாள் ஆவர்.

இவர் தனது கல்வியை யா/பண்ணாகம் மெய் கண்டான் மகா வித்தியாலயத்தில் பயின்று வாழ்க்கை என்னும் நீரோட்டத்தில் கலக்க வேண்டும் என்னும் அவாவினால் வாகன சாரதி பயிற்சி பெற்று சிறந்த ஒரு சாரதியாக தாய் தந்தையருடன் வாழ்ந்துவ்ருங்கால் ...

இவ்வூரில் வாழ்ந்து வந்த கிருஸ்ணர் தங்கமுத்து தம்பதியினரின் மூன்றாவது மகளான செல்லம்மா என செல்லமாக அழைக்கப்படும் அன்னம்மா என்னும் அமைதி அடக்கம் பொறுமை முதலிய நற் பண்புகள் நிறைந்த பெண்ணை திருமணம் செய்தார். இவர்களின் வாழ்க்கை என்னும் ஓடம் தழம்பாமல் தடம் புரளாமல் வேகப்படாமல் ஓடிக் டிகாண்டிருந்தது இவர்களின் இனிய வாழ்வை அவதானித்தவர் வாயார வாழ்த்துவதில் தயங்கார்.

இப்படி வாழ்ந்ததன் பயனாக பெற்ற செல்வங்களாக கிருஸ்ணறெஜி, தயாவதி, ஜெயவதனி, சலாஜினி, பிரபாகரன், கருணாகரன், சுபாஜினி, கலாஜினி, கிரிகரன் ஆகியோர் நன் மக்களாக அவதரித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் சிறந்த எதிர்காலத்தை நோக்கி செய்ய வேண்டிய கடமைகளைத் தன்னால் தன் சக்திக்கு உட்பட்ட வகையில் நிறைவேற்றி வாழ்க்கைக்குரிய கல்வி வசதிகளையும் ஏற்படுத்தி வைத்த தந்தையாக போற்றக் கூடியவர் தனது பேரப் பிள்ளைகளின் மழலை மொழிகளிலே அவர்களின் சிறு குறும்புகளிலே தன்னை மறந்த நிலையிலும் தானும் ஒரு மழலையாக செயற்பட்டுக் கொண்டு இருந்த காலமதில் கலியுகம் மீதில் இவர் மரியாதை கண்டிடும் என்பவர் சஞ்சலம் மிஞ்ச என்பது போல் எல்லோரும் கதி கலங்கி செயலிழந்து நிற்க நோய் அவரை வாட்டியது . இயற்கையின் நியதியில் யாரால் விலகிக் கொள்ள முடியம் அவர்களில் இவரும் ஒருவர் என்றே எண்ண வேண்டும். இறுதியில் 16.-8.2008 அன்று மாலை வடலியடைப்பு ஸ்ரீ சித்தி விநாயகன் பாதங்களில் இறைபதம் அடைந்தார்.



**அன்னாரின் ஆத்ம சாந்திக்காக**
**அனைவரும் பிரார்த்திப்போமாக.**



**யாழ் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளின் தொலைபேசி இலக்கங்கள்.**

| | |
|---|---|
| யாழ் போதான வைத்தியசாலை | 021 222 5155, 7351 |
| ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 021 226 3262, 3261 |
| ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை | 060 221 2614 |
| ஆதார வைத்தியசாலை ஊர்காவற்றுறை | 060 221 2660 |
| ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி | 021 222 8479 |
| பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித்துறை | 021 226 3530 |
| பிரதேச வைத்தியசாலை காரைநகர் | 021 222 5556 |
| பிரதேச வைத்தியசாலை அச்சுவேலி | 021 226 3152 |
| பிரதேச வைத்தியசாலை சங்கானை | 021 222 5477 |
| பிரதேச வைத்தியசாலை பண்டத்தரிப்பு | 060 221 3585 |
| பிரதேச வைத்தியசாலை வட்டுக்கோட்டை | 060 221 3582 |
| பிரதேச வைத்தியசாலை கோப்பாய் | 021 222 9970 |
| பிரதேச வைத்தியசாலை வேலணை | 060 221 3570 |
| இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் | 021 222 2561 |
| இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸ் | 021 222 7190 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அருமை அப்பாவே எங்கே நீங்கள்?????

**எம் அருமை அப்பாவே எங்கே நீங்கள்**

எம் அனைவரையும் ஒன்றாக அரவணைத்து
உங்கள் உதிரத்தை அன்பு பாசத்துடன் ஊட்டி
உங்கள் உயிர் மூச்சுக்களை எங்களுக்காகவே தியாகம் செய்த
தியாக தீபம் எங்கள் அருமை அப்பாவே எங்கே நீங்கள்

உங்கள் பிள்ளைகளாம் எம் அனைவரையும்
ஒழுக்க சீலர்களாகவும் அன்பானவர்களாகவும்
பண்புடன் கலிவியறிவுள்ளவர்களாகவும் ஆக்கி வைத்த
அன்புத் தெய்வம் எம் அருமை அப்பாவே எங்கே நீங்கள்

வாழ்வில் தன்பங்கள் தலைதூக்கிய போதிலும்
மனம் சலியாது உடல் உறுதி உள்ளத் திடத்தால்
உண்மை நேர்மையுடன் எம்மை செயல்ப்பட வைத்த
செயல் வீரனே எம் அருமை அப்பாவே எங்கே நீங்கள்

தான் பெற்ற செல்வங்கள் அனைவரும் என்றும்
வாழிவினில் வளம் பெற வேண்டும் எனம் நோக்குடன்
உத்தம குணாளர்களை மருமக்களாக்கி சேர்த்து வாழவைத்த
குல விளக்கே எம் அருமை அப்பாவே எங்கே நீங்கள்

வேர்விட்டு வளர்ந்து நிமிர்ந்து நின்று நிழல்தரும் ஆல மரம் போன்று
எம்மோடிருந்து இறுதி நேரத்தில் நோய் வாட்டிபோதும்
மெழுகுதிரி போன்று உங்களை உருக்கி எமக்கு ஒளி தந்த
அணையா ஜோதியே எம் அருமை அப்பாவே எங்கே நீங்கள்
எப்படி மறப்போம் அப்பா
உமதன்பின்றி எப்படி வாழ்வோம் அப்பா

**விண்ணில் அமைதியுற**
**பாசத்துடன்**
**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஔவையார் அருளிச் செய்த
## விநாயகர் அகவல்

### காப்பு

அற்புதவி நாயகர்தம் ஆசிரியர் பாவுரையைச்
சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே முற்படுசீர்ச்
சொற்பொருளெல் லாங்கடந்து தூய்தாம் மெய்ஞ்ஞாயமிகு
கற்பகவி நாயகன்றாள் காப்பு

### நூல்

சீதக்களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல அசைப் பாடப்
பொன்னரை ஞாணும் பூந'துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகு எறியப்ப
பேழைவயிறும் பெரும்பாராக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீலமேனியும
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியம்
திரண்ட முப்புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு(து) என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்(து) அருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உள்ளந்தனில் புகுந்து
குரவடி வாகிக் குவலயந் தன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்(து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமத சகாயன் குணத்தையும் கூறி
இடச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக துலாமும் சதுர்முக சூட்சமும்
எண்முகமாக இனிதெனக்(கு) அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனத் படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்(கு) அருளி
என்னை அறிவித்(து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தி என்செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயகா விரைகழல் சரணே

திருச்சிற்றம்பலம்

**விநாயகர் அகவல் முற்றிற்று.**

**சிந்தனைக்கு சில வரிகள்**


- **நீங்கள் எதிரிக்காக நெருப்பை எரித்தால் அது உங்களையே எரிக்கும்**
- **போர் என்பது யார் வீரன் என்பதை தீர்மானிப்பதில்லை, யார் மிஞ்சியிருப்பது என்பதைத் தீர்மானிப்பது**
- **நல்ல சங்கீதத்தை ரசியுங்கள், வாழ்க்கையின் சந்தோசமான பக்கங்களைப் பாருங்கள்.**
- **எல்லோரும் சொர்க்கத்திற்க்கு போக விரும்புகின்றார்கள், ஆனால் யாரும் இறப்பதற்க்கு விரும்புவதில்லை.**
- **வாழ்க்கை ஒரு பெரிய ஆலை, நாங்கள் அதற்க்குள் எதைப் போடுகின்றோமோ, அதை அப்படியே திருப்பி தரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் முத்து கந்தையா
அவர்களின்

***வம்சாவழி***



# நன்றி நவிலல்



'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

எமது குடும்பத்தின் அணையா விளக்கு ஸ்ரீ சித்தி விநாயகர்
பாதார விந்தங்களை அடைந்த போது அவரது
இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல்
அளித்த அன்பு உள்ளங்களுக்கும் பல்வேறு வழிகளில்
உதவி வழங்கிய வடலியூர் மக்களுக்கும்
கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட கலைவாணி
சன சமூக நிலையத்தினருக்கும் அன்னாரது
துயரச் செய்தியறிந்து அவரது இறுதிச் சடங்குகள்
வரை இரவு பகல் பாராது தோழோடு தோள்
நின்று உதவிக்கரம் நீட்டிய கலைவாணி
இளைஞர் மன்ற அனைத்து இளைஞர்களுக்கும்
வெளியூர்களில் இருந்து தொலைபேசி மூலம்
தொடர்புகொண்டு ஆறதல் அளித்த உற்றார், உறவினர்கள்,
அனைவருக்கும் இறுதி நிகழ்வுகள் முதல் இன்றுவரை
பல்வேறு வகையில் உதவிக்கொண்டிருக்கும்
அயலவர்களுக்கும் நாம் துயருற்றிருந்த வேளையில் பல்வேறு
வகையில் உதவிக்கரம் நீட்டிய பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.
சங்க பொது முகாமையாளர், பணியாளர்கள் அனைவருக்கும்,
இம் மலரினை வெளியீட்டிற்கு உதவி அளித்த பண்டத்தரிப்பு
இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி மனோன்மணி
சுவேந்திரனிற்க்கும் இம் மலரினை அழகுற வெளியிட்டு
எமக்களித்த சுதன் பிறிண்டேர்ஸ் வடலியடைப்புக்கும் எமது
மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

கலைவாணி வீதி,
வடலியடைப்பு.

இங்ஙனம்
குடும்பத்தினர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

சுதன் பிறிண்டேர்ஸ் வடலியடைப்பு T.P 0602218808

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Sivaranjanam

சுதன் பிறிண்டேர்ஸ், [illegible] 060-2218808

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org